சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 1210 / 2022**

வா.சா.2. ராமராஜ் 19.11.2024

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வாதி ரம்யாவிற்கு நான் தாய் மாமன் என்றால் சரிதான். ரம்யா சொல்லி தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் ஒண்டிவாரன்நாயக்கன்பட்டி என்றால் சரிதான். அது திண்டுக்கல் மேற்கு வட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 1-ம் வாதி 3 இலட்சம் வரை 1ம் பிரதிவாதிக்கு செலுத்தியிருக்கிறார் என்று சொல்லியுள்ளதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1ம் வாதியின் கணவருக்கும் 1-ம் வாதியின் கணவர் சகோதரர் பொம்முராஜ் என்பவருக்கும் தாவா சர்வே எண். 1எ, 1 பி என உட்பிரிவு செய்யபட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் நான் 1-ம் வாதியின் தாய் மாமன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.11.20 10:31:14 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

<u>சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்</u>

**<u>OS.No. 1210 / 2022</u>**

வா.சா.1. ரம்யா 19.11.2024

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

தாவா சொத்துக்கள் எனது மாமனார் வழியில் பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான். எனது மாமனாரும் அவரது சகோதரர்களும் 1991-ம் ஆண்டு அவர்களுக்குள் பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனது மாமனாருக்கு கிடைத்த சொத்துக்களை எனது கணவர் செல்வராஜ், எனது மாமனார், எனது கணவரின் சகோதரர் பொம்முராஜ் ஆகியோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் அனுபவித்து வரும் சர்வே எண்.68/1எ நிலத்தின் நான்குமால் குடிக்காரன்கரட்க்கும் தெற்கு, கிழமேல் ரோட்டிற்கும் வடக்கு, சுந்தவேல் நிலத்திற்கும் கிழக்கு, பொம்முராஜ் அனுபவித்து வரும் நிலத்திற்கு மேற்கு என்று சொல்லப்பட்டுள்ள கிழக்கு எல்லை மற்றும் தவறு. மற்ற மூன்று மால்களும் சரி. பழைய கிழக்கு எல்லையாக பழனியம்மாள் அனுபவித்து வரும் நிலத்திற்கு மேற்கு. நான் அனுபவித்து வரும் நிலத்திற்கும் பிரதிவாதிகள் பொம்முராஜ் அனுபவித்து வரும் நிலத்திற்கும் தென்வடலாக ஒரு வரப்பு உள்ளது என்றால் சரிதான். வரப்பு மேற்கே நான் அனுபவித்து வருகிறேன். வரப்புக்கு கிழபுறம் பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் அனுபவித்து வரும் தென்மேற்கு பூமியில் ஒரு சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த சாலை ஓடுகள் வேய்ந்த கிழக்கு பார்த்த சாலை என்றால் சரிதான். அந்த சாலை தற்போது என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதுபோன்று பிரதிவாதிகள் பொம்முராஜ், சந்திரா ஆகியோர்கள் சிமெண்ட் போட்டு அவர்கள் இடத்தில் சாலை போட்டுள்ளார்கள் என்றால் நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து தான் போட்டோம். சிமெண்ட் போட்ட சாலையில் மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது நிலத்தில் உள்ள ஓட்டு சாலையில் உள்ள மின் இணைப்பு எனது பெயரில் உள்ளது. பொம்முராஜ், சந்திரா அனுபவித்து வரும் 1பி நிலத்திற்கு கிழக்கே உள்ள 1சி நிலமானது எனங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் பொதுவாக உள்ளது என்றால் சரிதான். மற்ற நிலங்களும் பொதுவாக தான் உள்ளது. சொத்துக்களை தனித்தனியாக தான் அனுபவித்து வருகிறோம் என்றும் ஆனால் இன்னும் பாகபிரிவினை பத்திரம் எழுதிக் கொள்ளவில்லை என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். எனது நிலத்திற்கும் மேற்கே எனது மாமனார் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த நிலம் எனது மாமனாரின் சுயசம்பாத்திய சொத்து என்றால் சரிதான். அந்த சுயசம்பாத்திய சொத்தில் கிணறு மற்றும் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். அதில் இருந்து தண்ணீரை எனது நிலத்திற்கு பாய்ச்சுவதற்கு எனது மாமனாரிடம் கேட்டோம் அவர் தண்ணீர் கொடுக்க

மறுத்துவிட்டார் என்றால் சரிதான். ஊர் பெரியவர்களை வைத்து அதில் இருந்து தண்ணீர் பெறுவதற்கு நாங்கள் கேட்டோம் என்றால் சரிதான். அவர் கொடுக்க மறுத்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதற்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை. ஏற்கனவே நானும் பிரதிவாதிகளும் அனுபவித்து பாகபிரிவினை செய்து அனுபவித்து வந்தோம் என்றும் எனது மாமனார் அவர் நிலத்தில் இருந்து தண்ணீர் கொடுக்க மறுத்ததால் அதை மனதில் வைத்து கொண்டு பிரதிவாதிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த கிணற்றில் எனக்கு இரவை செய்ய அனுமதி அளித்தால் நான் இந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உரிய தரப்பினரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளதால் இந்த தாவா சேர்க்க வேண்டிய அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்திற்கான தோசத்தால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. 1991-ம் ஆண்டு பூர்விக சொத்தில் எனது மாமனார் பாக பிரிவினை செய்து கொண்ட பின்பு எனது மாமனாரும் எனது கணவரின் சகோதரியும் சேர்ந்து தாவா சொத்துக்களில் அவர்களின் பாக உரிமையை பொறுத்து பாக பாத்திய விடுதலை பத்திரம் எனது கணவருக்கும் 1-ம் பிரதிவாதி பொம்முராஜ் என்பவருக்கும் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாக பாத்திய விடுதலை பத்திரத்திற்கு பின்பு தாவா சொத்துக்கள் எனது கணவருக்கும் பொம்முராஜ் என்பவருக்கும் மட்டுமே பாத்தியம் என்றால் சரிதான். அவ்வாறு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டதற்கு பின்னிட்டு தான் தாவா சொத்தான சர்வே எண்.68/1 சர்வே எண்.1எ, 1பி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. (சாட்சி தற்போது அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறார்.) எனக்கு தாவா சொத்து உட்பிரிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றும் இந்த வழக்கிற்காக பாக பிரிவினை செய்யப்படவில்லை எனவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை பிரதிவாதியின் அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.11.20 10:31:19 +0530

சார்பு நீதிபதி

ஓட்டன்சத்திரம்